[1978 மார்ச் 9

ஏலகிரிமலையை கோடைவாசத்தலமாக்குதல்.

*468 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா?

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலையை மேம்படுத்தி, அதனை ஏழைகளின் கோடைவாசத் தங்கும் இடமாக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தற்போது, ஏலகிரி மலையைச் காணவரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குப் போதுமான இடவசதி அளிக்கும் வகையில் படுக்கைகள், குடிதண்ணீர், நீராடிக் கழிப்பிட வசதிகளுடன் கூடிய நான்கு பிரிவுகள் கொண்ட பெரிய கூடம் ஒன்றை கட்டுவதற்கான செயற்குறிப்பினை அரசு பரிசிலித்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா: வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலையை ஏழைகளின் உதகமண்டலம் என்று சொல்கிறார்கள். அதை மேம்படுத்த திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதற்கு முன்னலேயே, ஒரே ஒரு சுற்றுலா மாளிகை அங்கிருப்பதாகவும் அதில் பெரும்பாலும் அதிகாரிகள் மட்டத்தில் உள்ளவர்கள் மட்டும் அங்கே தங்கிவருவதாகவும் வெளிப் பயணிகள் அங்கே வந்து தங்குவதற்கு இப்போது வசதி இல்லாமல் இருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, அந்நிலையைத் தவிர்க்க விரைந்து இந்தக் கட்டடங்களை விரிவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற நிதி ஆண்டிலேயே, இதற்கு ஒரு லட்சத்து ஐந்தாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான வேலைகள் துவக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

Tourist Home in Nagappattinam

* 469—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state—

(a) whether there is any proposal to build a tourist home in Nagappattinam; and

(b) if so, the details thereof?